# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

எண்.100 அண்ணா சாலை , கிண்டி, சென்னை–600032
தொலைபேசி:044–22201337
மின்னஞ்சல் முகவரி:ombudsmanlocal@tn.gov.in

அசல் மனு எண்: 0029/2015/ந

ஆ.எண்: 167/2016

நாள்: 03.11.2016

திரு. எச். ஜான்பாஸ்கோ,
உதகமண்டலம், நீலகிரி. – மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
உதகமண்டலம் நகராட்சி,
உதகமண்டலம். – எதிர் மனுதாரர்

**ஆணை:**

மனுதாரரது 27.04.2015 நாளிட்ட மனு 29.04.2015 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து மனுதாரரிடமிருந்து 04.06.2015, 03.08.2015, 30.11.2015, 29.12.2015, 30.04.2016 நாளிட்ட கடிதங்கள் மற்றும் 25.10.2016 நாளிட்ட மின்னஞ்சல் கடிதமும் வரப்பெற்றன.

மனுதாரரது மனுக்களில் உதகமண்டலத்தில் அனுமதியற்ற மற்றும் விதி மீறல் கட்டிடங்கள் உள்ளதாகத் தெரிவித்து நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. மேற்படி புகார்கள் தொடர்பாக அறிக்கைகள் பெற்று விசாரணை நடவடிக்கைகள் மேற்கொண்டிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இது தொடர்பாக 04.08.2016 அன்று உதகமண்டலம் நகராட்சி ஆணையர் அளித்துள்ள வாக்குமூலத்தில் இது சம்பந்தமாக தற்போது வரை உள்ள உயர்நீதி மன்ற மற்றும் பிற நீதி மன்றங்களில் உள்ள வழக்கு விவரங்கள் தொடர்புடைய ஆவணங்களை விரைவில் சமர்ப்பிப்பதாக உறுதி அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தற்போது வரப்பெற்றுள்ள நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்: 1891/15 எப்.1 நாள்: 27.10.2016ல் நீலகிரி மற்றும் கொடைக்கானல் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள அனுமதியற்ற கட்டுமானங்கள் மற்றும் விதிமீறல் கட்டிடங்கள் தொடர்பாக மாண்பமை உச்ச நீதி மன்றத்தில் வழக்கு (SLP) பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014-ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு (10) (3) (b) ன்படி நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறை மன்ற நடுவம் விசாரித்தல் கூடாது. எனவே, மனுதாரரது அத்தகைய புகார்கள் குறித்து இம்முறைமன்ற நடுவத்தால் தற்போது விசாரித்திட இயலாதெனத் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2016–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

4/11/2016
செயலாளர்.

<u>பெறுநர்:</u>
திரு. எச். ஜான்பாஸ்கோ,
232, டிங்கில் டேல் (பிங்கர் போஸ்ட்)
உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.

நகராட்சி ஆணையர்,
உதகமண்டலம் நகராட்சி,
நீலகிரி மாவட்டம்.